உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சைவம்

மலர் 1.] | ஆனந்த௵ பங்குனி௴ 1915௵ மார்ச்௴ | [இதழ் 3.

## ஞானப்பிரகாச சம்பாஷணை.

*" பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத்*
*துறவியெனுந் தோற்றோணி கண்டீர் - நிறையுலகிற்*
*பொன்மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்தன்*
*றன்மாலை ஞானத் தமிழ்."*

சிவபுரி என்னும் ஓர் கிராமத்தில் ஞானப்பிரகாசர் என்னும் சைவப்பிரசாரக ரொருவர் பரமசாம்பவராய் தமது மாணாக்கர்களுக்குச் சித்தாந்த சாத்திரோபதேசம் செய்துகொண்டிருந்தனர். அவர் நாடோறும் அக்கிராமத்திலுள்ள சிவாலயத்திற்குப்போய் சிவதரிசனஞ் செய்வது வழக்கமாயிருந்தது. அவர் ஆலயத்திற்குப் போம்போதும் போய்த்திரும்பி வரும்போதும் அவரைப் பலர் கைகூப்பித் தொழுவார்கள். பலர் தரையில் வீழ்ந்து நமஸ்கரிப்பார்கள். அவ்வாறு வணங்குவார்க்கெல்லாம் அவர் திருநீறு கொடுத்து ஆசிகூறுவார். அவர் ஒருநாள் அவ்வாலயத் திருவிழாவைத்தரிசித்துத் தமது திருமடத்தை நோக்கித் திரும்பிச்செல்லுகையில், ஒருவன் தலையில் தொப்பியும், மூக்கில் கண்ணாடியும், கழுத்தில் காலர் என்னும் பட்டையும், காலில் மேற்சோடும் பூட்சு என்னும் பாதரட்சையும், உடம்பில் ஓபன்கோட் என்னும் மேற்சட்டையும், காலில் ட்ரௌஸர்ஸ் என்னும் காற்சட்டையுந் தரித்து, முகத்தைக் கைகுட்டையால் அடிக்கடி துடைத்துக்கொண்டு, வாயிலொரு சிகரெட் வைத்துக்கொண்டு, பைசிகில் என்னும் இருசக்கர வண்டியிலேறி வேகமாய் அவ்வழியாக வந்தான். அச்சமயத்தில் ஞானப்பிரகாசரைப் பலரும் வழியெங்கும் தரையில் வீழ்ந்து நமஸ்கரித்துக்கொண்டிருந்தமையால் அவன் தன் பைசிகில் வண்டியை நேராய் நடத்திச்செல்ல இயலா

மல் அதினின்றும் இறங்கி அங்கு நிகழ்ந்தனவற்றை நோக்குவானாயினன். நோக்குகையில், ஒருவர் சரீரமெங்குந் திருநீறுபூசி, திரிபுண்டரந் தரித்து, உருத்திராக்க மணிபூண்டு, அன்புருவாய் விளங்குவதையும், அவரைப் பலரும் பேரன்போடு வணங்குவதையும் கண்டு, அருகிலிருந்த ஒருவரைப்பார்த்து, அப்பெரியாரைச் சுட்டி "ஐயா, அதோ உடம்பெல்லாம் துறுணூறுபூசி ஏதோ கொட்டைகளைக் கட்டிக்கொண்டிருக்கிறாரே, அவர் யார்? அவரையேன் இவர்களெல்லாம் வணங்குகிறார்கள்?" என்றுகேட்டான். அதற்கு, அருகிலிருந்தவர் "ஐயா, அவர் மிகவும் கற்றவர், பரமஞானி. அவர் தமது திருமேனியில் தரித்திருப்பது திருவெண்ணீறு, அணிந்திருப்பது உருத்திராக்கமணி. இவ்விரண்டும் தம்மைத் தரித்தோர் தரிசித்தோர் பூசித்தோர் இவர்களுடைய பாவங்களைப்போக்கிப் புனிதப்படுத்துவன. அவர் இருபக்கத்திலும் கைகட்டி வாய்பொத்தி நிற்பவர்கள் அவர் மாணாக்கர்கள். அவரைப் பூசித்தால் நாம் செய்த பாவமெல்லாம் நம்மைவிட்டு நீங்கி நற்கதி யடைவோம்" என்றனர். அவன் அதைக் கேட்டு "நான் சென்ஸ் (Nonsense) சாம்பலாவது, கொட்டையாவது, பரிசுத்தப்படுத்துகிறதாவது, (Fools) மூடர்கள்" என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டு, "இன்னும் இவர்களை யாராய்வோம்" என்று நிதானித்துக் கூர்ந்து ஆராய்வானாயினன். ஆராய்ந்தபோது, அப்பெரியாரை வணங்கி நின்றவர்களுள் சிலர் மிகவும் ஆங்கிலத்தேர்ச்சிபெற்று (B. A.) பி. ஏ. முதலிய பட்டங்க ளடைந்தவர்களா யிருப்பதையும், சிலர் அரசாங்கத்தில் உயர்ந்த உத்தியோகங்கள் வகிப்பவராயிருப்பதையும், சிலர் பெரிய பணக்காரர்களாயிருப்பதையும் கண்டான். காணவே, "இத்தனை பெரியமனுஷர்களும் இவரை வணங்குவதனால் இவரிடத்தில் ஏதோ உண்மையிருக்கவேண்டும். இவர் அணிந்திருக்கும் திருநீற்றிலும் உருத்திராக்கத்திலும் ஏதோ மகிமை இருக்கவேண்டும்" என்று அவனுக்குத் தோன்றிற்று. தோன்றவே, அவன் மெதுவாய் தன் பைசிகில் வண்டியைத் திருப்பி அருகிலிருந்த சுவரண்டை நிறுத்தி வாயிலிருந்த சிகரெட்டை விட்டெறிந்து, தன் பாதரட்சையைக் கழற்றிவிட்டு, தொப்பியை யெடுத்து அக்குளில் வைத்துக்கொண்டு, அப்பெரியாரிடஞ் சென்று நமஸ்கரித்து நின்றான். அவர் அவனுக்குத் திருநீறு கொடுத்தருளினார். அவன் அதுவரையில் திருநீறிட்டறியாதவனாகையால், அதை ஒரு கைநீட்டிவாங்கி, அதில் எள்ளத்தனை யெடுத்துத் தன்புருவமத்தியில் வட்டமாக இட்டுக்

கொண்டு, மீதியை வாயால் ஊதிவிட்டு, கையைத் தன் குட்டையால் துடைத்துக்கொண்டு, அவரைவிட்டுப்போகாமல் அவரைப் பார்த்துக்கொண்டே எதிரில் நின்றான். அவன் அவ்வாறு நிற்பதைப் பார்த்த பெரியார் அவன் அறியாமைக்கு இரங்கி, அவனை நோக்கி "அப்பா, நீயார்" என்றனர். அவன் "நான்தான் ராமசாமி. எங்களண்ணுபெயரைச் சொன்னால் எல்லாருக்குந் தெரியும்" என்றான். பெரியார் "உன்னிருப்பிடம் எங்கே" என்றனர். அவன் "இதையடுத்த கோலாகல நகரம்" என்றனன். அவர் "இங்கே உனக்கென்ன வேண்டும்" என்றனர். அவன் "சாமீ, எனக்கு நீங்கள் கடவுளைக் காட்டவேண்டும்" என்றனன். ஞானப்பிரகாசர் புன்னகை செய்து, "அப்படியே காட்டுவோம், நீ நாளையதினம் பகல் 3-மணிக்குமேல் நமது மடத்துக்குவா" என்றனர். அதற்கு அவன் "சாமீ, நான் செய்யும் வர்த்தகத்தில் எனக்கு அதிக ஓய்வில்லை. தினந்தோறும் பகல் 3-மணிக்குமேல் சிறிதும் ஓய்விராது" என்றான். ஞானப்பிரகாசர் பின்னும் புன்முறுவல்செய்து "ஆனால் உனக்கு ஓய்வுள்ள போதுவா" என்று சொல்ல, அவன் "சாமி அப்படியே வருகிறேன்" என்றுசொல்லி அவரைவிட்டகன்றான். அவன் அவரை விட்டு நீங்கினனாயினும், அப்பெரியார் தரிசன விசேடத்தாலும், பூர்வபுண்ணியப்பலனாலும் அவன்மனம் அவரைவிட்டு நீங்கவில்லை. அதனால் அன்றெல்லாம் அவன் தன் வர்த்தகத்தொழிலை அதற்கு முன்செய்ததுபோல் செய்யஇயலவில்லை. இரவெல்லாம் நித்திரைவாராமல் எப்போது பொழுதுவிடியும் என்று எதிர்பார்த்தவண்ணமாயிருந்தான். பொழுது விடிந்ததும், அவர் திருமடத்திற்குப் போகப் புறப்பட்டான். புறப்பட்டபோது, அவர் தன்னைப் பகல் 3-மணிக்கு வரச்சொன்னதனால் அவருக்குக் காலையில் போதுமான நேரம் இராதுபோலும், 3-மணிக்குப்போவதுதான் உத்தமம் என்று எண்ணினான். இவ்வாறு எண்ணின எண்ணமும் அப்பெரியாரது வடிவமுமே அவன் மனதிற்குடிகொண்டமையால் அவன் அதுவரையில் ஓய்வின்றிச்செய்துவந்த வர்த்தகத்தொழிலைமறந்தான். பகல் 3-மணிக்கெல்லாம் ஞானப்பிரகாசர் மடத்தையடைந்து அவர் திருவடிகளில் வீழ்ந்து நமஸ்கரித்தான். ஞானப்பிரகாசர் அன்று அவனைப் பார்க்கையில் அவன் முன்னாளி லிருந்ததுபோலிராமல் சற்சீடர்களுக்குள்ள நல்லிலக்கணங்கள் சில அவனிடம் தோன்றக்கண்டு, ஆச்சரியமடைந்து, ஆசி கூறி, அவன் நெற்றியில் விபூதி தரித்துத் தன் அருகில் உட்காரவைத்து, அவனை நோக்கி "அப்பா, உன்னைப் பார்

த்தால் மிக்வும் நல்லவனாகக் காணப்படுகிறாய்; உனக்கு இப்போது வயது முப்பதுக்கு மேலாயிருக்கலாம் என்று தோன்றுகிறது; நீ இதுவரையில் ஏதேனுஞ் சாஸ்திரப் பயிற்சி செய்ததுண்டா?; உண்டேல், யாரிடத்தில் என்னென்ன சாஸ்திரங்களைப் படித்தாய்?" என்று வினவினார். அவன் அவர் வினவிய வினவுக்குப் பதில் சொல்லமாட்டாமல் என்ன சொல்லலாம் என்று சற்றுயோசித்து "சுவாமி இதற்குப்பதில் சொல்ல எனக்கு வெட்கமும் வருத்தமு மாயிருக்கிறது" என்று சொல்லி, தலைகுனிந்து மௌனமாயிருந் தான். ஞானப்பிரகாசர், அவன் சாஸ்திர ஆராய்ச்சி செய்ததே யில்லை யென்பதையும், அதற்காக அவன் உண்மையாய் வருத்தப் படுவதையும் அறிந்து, "அப்பா, தீயோர் தாங்கள்செய்யும் தீவினை களுக்கு வருத்தப்படமாட்டார்கள்; வெட்கப்படவு மாட்டார்கள். நீ உன் நடவடிக்கைகளை யெண்ணி வருத்தப்படுவதும் வெட்கப் படுவதும் உன் நற்குணத்தையும் நற்காலத்தையும் காட்டுகின்றன. உன் பிறப்பு வளர்ப்பு முதலிய வரலாற்றைப் பயப்படாமல் யானறியச் சொல்" என்று அவனிடம் மிகுந்த கருணையோடு பேசினார். அத னால், அவன் அவரைத்தன் பிதாவைப்போல் எண்ணி, தன் வரலாற் றைப்பின் வருமாறு சொல்லத்தொடங்கினான். "சுவாமி, அடியேன் செகண்ட் ஜூன் எய்ட்டியில் (2nd June 1880) பிறந்தேன். எனக்கு இப்போது முப்பத்திரண்டு வயதாகிறது. என் பாதர் (Father) டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜி (District Judge) யாயிருந்தார். அவருக்கு நான் ஒரே ஒருபிள்ளை. என் பேரென்ட்ஸ் (Parents) என்னை மிகவும் செல்வமாக வளர்த்தார்கள். நான் சிறுபோதில் எவ்வளவு துஷ்டவேலைகளைச் செய்தாலும் அவையெல்லாம் அவர்களுக்கு இன் பமாகவே யிருந்தன. அவர்கள் எக்காலத்தும் என்மனம் நோவ நடந்ததேயில்லை. அவர்களுக்குப் பயந்து என் உபாத்தியாயர்கூட என்மனம் நோவ நடந்ததில்லை. அவர்கள் எனக்கு மேலுமேலும் பிதுரார்ஜிதம் சேகரித்து வைப்பதிலேயே கண்ணுங்கருத்துமாயிருந் தார்கள். எவருக்கேனும் ஏதேனுங் கொடுத்தால் எனக்கு வைக் கும் ஆஸ்தியில் குறைந்து போமென்று பயந்து யாருக்குங் கொடா மல் எனக்காகப் பரமலோபிகள் என்று பேரெடுத்தார்கள். என் பொருட்டுச் சிலசமயங்களில் லஞ்சங்களும் வாங்கி பாபிகளென்றும் பேரெடுத்தார்கள். இவ்வாறாக என்னை வளர்ப்பதும் எனக்கு ஆஸ்தி சேர்த்து வைப்பதுமே இம்மானிடப் பிறவியாலாய பயனென்று எண்ணி நடந்தார்கள்.

என் தகப்பனருக்கு ஆங்கில பாஷையிலிருந்த மதிப்பும் பயிற்சியும் தமிழ்ப் பாஷையிலில்லை. அவர் புத்தகசாலையில் வண்ணன் கணக்குப் புத்தகமுதல் எல்லாப் புத்தகங்களும் ஆங்கிலமாகவே இருந்தன. என்னுடன் பாடசாலையில் படித்த மாணக்கர்களும் தமிழ்கற்பதில் சிறிதும் சிரத்தையில்லாதவர்களாய் தமிழ்ப்பாடம் படிக்கும் காலத்தை விளையாடுங்காலமாகக் கழித்தார்கள். இவர்களுடன் பழகிய எனக்கும் தமிழ் என்றால் அருவருப்பாயிருந்தது. நான் என் பிதாமாதாக்களைக் குழந்தைப் பருவத்திலுங்கூட அப்பா அம்மா வென்று கூப்பிட்டறியேன். பப்பா மம்மா என்று ஆங்கிலச் சொற்களால் அழைப்பேன். என் தந்தையினிடம் வந்து கொண்டிருந்த சிநேகிதர்களும் தமிழர்களாயிருந்தாலும் அவர்கள் தமிழில் சம்பாஷணை செய்ததை நான் கேட்டதேயில்லை. அவர்கள் ஒருவருக்கொருவர் எழுதிய கடிதங்களும் ஆங்கிலமாகவேயிருந்தன. இதனால் எனக்குத் தாய் பாஷை அன்னிய பாஷையாய் விட்டது. நான் படித்த பாடசாலையோ கிறிஸ்துவ பாடசாலை. அதிலிருந்த உபாத்தியாயர்கள் கிறிஸ்துமார்க்கமே உண்மையான மார்க்கமென்று போதித்தார்கள். அவர்கள் கடவுள் ஒருவர் உண்டு என்று போதித்தாலும், அவர்கள் கூறும் கடவுளின் இலக்கணங்களும், உலகத்தின் தோற்றக்கேடுகளின் காரணங்களும், உயிர்களின் இலக்கணங்களும், முத்தியிலக்கணமும், தருக்க நூலுக்கு ஒத்தனவாயில்லை. யாரேனும் அவர்கள் சொல்வதை யாட்சேபித்தால் அவர்களுக்குத் தகுந்த சமாதானம் சொல்லாமல், “நாங்கள் சொல்வதை நம்பி ஏசுவை விசுவாசியுங்கள், மனந்திரும்புங்கள், தடுத்துப் பேசாதீர்கள்” என்பார்கள். இதனால் அவர்கள் கடவுள் உண்டு என்று சொல்வதில் எனக்கு நம்பிக்கை வரவில்லை. எனக்கு வீட்டில் கல்விகற்பித்த உபாத்தியாயரோ நாஸ்திகக் கொள்கையுடையவர். எவர்களேனும் இவரிடம் கடவுள் உண்டு என்று வாதித்தால் அவர்கள் தலைக்குப் போடுவதைக் காலுக்கும் காலுக்குப் போடுவதைத் தலைக்குமாகப் போட்டுக் கேள்விகளைக்கேட்டு அவர்கள் வாயையடக்கிப் பரிகாசஞ் செய்வார். என் தகப்பனர் முகத்தில் ஏதேனும் இட்டதையாவது கோயிலுக்குப் போனதையாவது நான் கண்டதேயில்லை. அவர் சிநேகிதர்கள் அவரையும் என்னையும் தாசிக் கச்சேரிகளுக்கும் விருந்துகளுக்கும் நாடகங்கள் முதலியவற்றிற்கும் அழைத்துச் சென்றார்களேயன்றி எந்தக் கோயிலுக்காவது சைவக் கூட்டங்களுக்காவது அழைத்துச் சென்றதேயில்லை. அவர்கள் அவரைச்

சில சமயங்களில் தாசிவீடுகளுக்கும் அழைத்துச் சென்றதுண்டு. சிலசமயங்களில் அவர்களே விலையுயர்ந்த (Wine) சாராயங்களை விலை கொடுத்து வாங்கி "(Brother) பிரதர் இதைச் சாப்பிட்டுப் பாருங்கள்" என்று கொடுப்பார்கள். இதனால், இதுவரையில் நான் தங்களைப் போன்ற பெரியோர்களைத் தரிசிக்க நேரிடவேயில்லை. ஆனால், என்னுடைய தாயாரைப்பெற்ற பாட்டனார் மாத்திரம் உண்மையான சிவபத்தரென்று என் தாயார் சொல்வதுண்டு. அவர் குமாரரான என் அம்மான் என் தாயாரைப்பார்க்க அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வருவார். அவர் வரும்போதெல்லாம் விபூதி பூசிக்கொண்டு உருத்திராக்க மணிந்திருப்பார். எந்நேரமும் சிவ சிவ சிவ சிவ சிவ என்றுசொல்வார். எங்களைப் பார்த்துப் பாபிகளென்று வைவார். ஆனால், அவர் எந்நேரமும் தன்வைப்பாட்டி வீட்டிலேயே இருந்து கொண்டு பெண்டாட்டியைத் திண்டாட்டஞ்செய்தனர். அதனால் அவரிடத்தில் எனக்குச் சிறிதேனும் மதிப்பில்லை. அவரை என் உபாத்தியாயரிடம் இழுத்துக்கொண்டுபோய் விட்டு நாத்திகம் பேசச் செய்து கேலிசெய்வேன். என் அண்டை வீட்டுக்காரரொருவர் இருந்தார். இவர் "நானே எங்கும் நிறைந்தபிரமம். என்னைவிட வேறொரு பொருளில்லை. என்னைத் தவிர மற்றவையெல்லாம் மித்தை (முயற்கொம்புபோல் இல்லாதபொருள்கள்). நான், நீ, அவன், அவள், அது என்பனயாவும் மித்தை" என்று சொல்லுவார். இவரே துட்டுக்காசைப்பட்டு என் அம்மானைக்கெடுத்தவர். இவர் இப்படிச் சொல்லிக்கொண்டே பலகுடிகளைக் கெடுத்தார். இதனால் நான் இவரைச் சட்டைசெய்வதேயில்லை.

இவர் என் உபாத்தியாயரைப் பார்த்து "பொருளல்லவற்றைப் பொருளென் றுணரு - மருளானா மாணாப் பிறப்பு" என்று திருவள்ளுவநாயனார் கூறியவாறு, கடவுளில்லை, புண்ணியபாவங்களில்லை, சொர்க்கநரகங்களில்லையென்றும், மித்தையாகிய இவ்வுலகமும் உலக இன்பமுமே உள்பொருள்களென்றும் கூறும் உலோகாயதராகிய உங்களுக்கு(க்கதி) மோட்சமேயில்லை, நரகமே காணியாட்சியாகும்" என்பார். என் உபாத்தியாயர் "ஐயா, அந்த நாயனாரே "உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத் - தலகையா வைக்கப் படும்" என்று கூறி, உள்பொருளாகிய உலகத்தை முயற்கொம்புபோல் இல்லாத பொருளென்றுகூறும் உம்மைப் பேய் என்று நிந்தித்திருப்பதை நீர் அறியீரோ" என்றுசொல்லி எனக்குக் கண்ணைக்காட்டுவார். அப்போது நான் இவர்கைத்தடி தலைப்பாகை முதலியவற்றை எடுத்து

ஒளித்துவைத்துவிடுவேன். இவர் மிகவும் வருத்தப்பட்டுத் தேடித் தேடியலேவார். அப்போது நான் "ஐயா, உமது தடியும் மித்தை தலேப்பாகையும் மித்தை, நீரும் மித்தை நீர் தேடுவதும் மித்தை" என்று கேலிசெய்வேன். இவ்வாறு நடந்துவரும் நாளில் என் தகப்பனுருக்குத் திடீரென்று பாரிசவாயு வந்து ஒரு கையுங்காலும் விழுந்துவிட்டன. (இன்னும் வரும்.)

---

## பதி பசு பாசம்.

(27-வது பக்கத் தொடர்ச்சி)

" பலகலேயா கமவேதம் யாவையினுங் கருத்துப் பதிபசுபா சம் தெரித்தல் " என்னும் சிவப்பிரகாசச் செய்யுளின்படி, வேதம் ஆகமம் என்னும் முதனூல்களும் இவற்றினின்றும் விரிந்த பலவகைப் பட்ட ஞானநூல்களும் பதிபசுபாசம் என்னும் முப்பொருள்களின் இலக்கணங்களே விளக்க வந்த நூல்களாம். இவற்றுள், வேதம் பசுவைப் போலவும், சைவாகமம் அதின் பாலேப் போலவும், தேவாரத் திருமுறைகள் அப்பாலின் நெய்யைப் போலவும், சிவஞானபோதம் என்னும் ஞானநூல் அந்நெய்யின் சுவையைப் போலவும் இருக்கும்.

" வேதம்பசு வதன்பான் மெய்யாகம நால்வ
ரோதுந் தமிழதனி னுள்ளுறுநெய்—போதமிகு
நெய்யினுறு சுவையா நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்ததமிழ் நூலின் றிறம்."

சிவஞான போதம் சகல வேதாகமசாரமாயுள்ள உண்மை ஞானநூலென்பதையும், இந்நூலே ஆன்மாக்களேப் பிறவிப்பெருங் கடலினின்றுங் கரையேற்றி முத்தியங்கரையிற் சேர்க்கும் தெப்பமாம் என்பதையும் விளக்க வேண்டியே, திருமால் முதலியவர்களுக்கு ஆசிரியத்தன்மை கொடுத்து எல்லோர்க்கும் முதற் குருவாய், கல்லாலின் புடையமர்ந்த கண்ணுதலார் இதனேத் தமது திருக்காத்தில் பிரியாது வைத்துக் கொண்டிருக்கிருர். சிவாலயங்களில் தட்சிணுமூர்த்தியைத் தரிசனஞ் செய்வோர் இதனேக் காண்பார்கள்.

### சிவதத்துவ விவேக விருத்தி.

#### தட்சிணுமூர்த்தி வணக்கம்.

திருமாலிந் திரன்பிரம னுபமனியன் றபனனந்தி செவ்வே ளாதித்
தருமமுது குரவருக்குந் தனதருளா லாசிரியத் தன்மை நல்கி
வருமெவர்க்கு முதற்குருவாய் மெய்ஞ்ஞான முத்திரைக்கைம் மலரும் வாய்ந்த
வுருவழகுங் குறுநகையுங் காட்டியரு டருஞ்சிவனே யுளத்தில் வைப்பாம்.

இந்நூலில் பதிபசுபாச இலக்கணங்கள் பன்னிரண்டு சூத்திரங்களில் அடக்கிச் சொல்லப்பட்டன. இதனை நமது மெய்கண்டதேவர் தமிழில் பன்னிரண்டு சூத்திரங்களாக அருளிச் செய்தனர். இதுவே தமிழ்ச் சிவஞானபோதமாம். இதனை விரித்துச் சிவஞான சித்தி முதலிய பதின்மூன்று சித்தாந்த நூல்களும், சிவஞான போதமாபாடிய முதலியனவும் செய்யப்பட்டன. இவை இலக்கிய இலக்கண நூல்களையும் தருக்க நூலையும் கற்று வரன்முறையாக குருமுகமாகப் பாடங்கேட்டவர்களுக்கே விளங்கும். ஆதலால், இந்நூல்களிற் கூறிய முறைப்படி பதிபசுபாச இலக்கணங்களை இப்பத்திரிகையில் கூறப்புகின் கற்றவர் சிலர்க்கு மாத்திரம் விளங்கும்; மற்றவர்களுக்குப் பயன்படாது. ஆதலால், இயன்றவரையில் அவ்விலக்கணங்களைப் பலரும் அறியுமாறு, எளிய நடையில், தொகுத்தும், விரித்தும், முன்னதைப் பின்னும் பின்னதை முன்னுமாகவும், ஒருமுறைக்கு இருமுறை மும்முறையாகக் கூறியதைக் கூறியும் விளக்குவாம்.

## சிருட்டி.

பலர் இந்நிலவுலகத்தையும் இதிலுள்ள உயிர்களையும் பார்த்து. கடவுள் உலகத்தையும் உயிர்களையும் உண்டாக்கினுர் என்றும், கடவுளாற் படைக்கப்பட்ட உலகமும் உயிர்களும் இந்த நிலவுலகம் ஒன்றேயெனவும், இவ்வுலகத்திலுள்ள உயிர்களேயெனவும் எண்ணுகிறுர்கள். கடவுள் முன்னில்லாத உலகத்தை யாவது உயிர்களை யாவது உண்டாக்கினதேயில்லை. உள்ளது போகாது இல்லது வாராது என்னும் சித்தாந்தத்தின்படி கடவுள் முன்னில்லாத உலகுயிர்களை உண்டாக்கினதுமில்லை அழிப்பதுமில்லை. உலகமும் உயிர்களும் கடவுளைப்போலவே என்றும் உள்ளன. கடவுள் என்று உண்டோ அன்றே உலகமும் உண்டு, உயிர்களும் உண்டு. ஆனுல், சிவபெருமான் உலகுயிர்களைப் படைத்துக்காத்து அழிக்கிறுர் என்கிறுர்களே அதற்கென்ன பொருள் எனில், சொல்லுவாம். கடவுள் உலகத்தைப் படைத்தார் என்பது குயவன் பாண்டத்தைச் செய்தான் என்பது போலாம். குயவன் பாண்டத்தை யெப்படிச் செய்தான் எனில், மண்ணையும் சக்கரத்தையுங்கொண்டு செய்தான் என்போம். அவன் மண்ணை உண்டாக்கவில்லை. மண் முன்னமே யிருந்தது. அந்த மண்ணைப் பாண்டமாக்கினுன். பாண்டம் உண்டானதற்குக் குயவன் ஒரு காரணமும், சக்கரம் ஒரு காரணமும், மண் ஒரு காரணமுமாம். இவற்றுள் மண் முதற்காரணமெனவும் சக்கரம் துணைக்காரண மென

வும் குயவன் நிமித்த காரணமெனவும் சொல்லப்படும். இம்மூன்று காரணங்களினால் உண்டான காரியம் பாண்டமாகும். இதுபோல் உலகத்திற்கு மாயை முதற்காரணமும், சத்தி துணைக்காரணமும், சிவம் நிமித்த காரணமுமாம். இம்மூன்று காரணங்களால் உலகமாகிய காரியம் உண்டாயிற்று. மண் பாண்டமாகிய உருவத்தையடைந்தது. அடைந்தும் அது மண்ணேயாயிருக்கிறது. அது உடைந்த பின்னும் மண்ணேயாயிருக்கும். அதுபோல் மாயை பிரபஞ்சமாகக் காரியப்பட்டது. காரியப்பட்ட பிரபஞ்சமும் மாயா ரூபமே யன்றி வேறல்ல. (8-வது பக்கம் "மாயையே" என்னுஞ் செய்யுளைக்காண்க). பிரபஞ்சமழிந்த பின்னும் மாயையாகவே அழியாமல் நிலைத்திருக்கும். (இவ்விடத்தில் பிரபஞ்சம் என்றது தனு கரணபுவனபோகங்களாம்). இவ்வாறு கடவுள் நிமித்த காரணமாயிருந்து தம்மைப்போலவே தோற்றமும் ஈறுமில்லாத ஆன்மாக்களுக்குத் தோற்றமும் ஈறுமில்லாத மாயையைக்கொண்டு சரீரங்களைக் கொடுத்தலும், அவைகள் வசிக்கும் இடங்களான புவனங்களை யுண்டாக்குவதுமே சிருட்டி (படைத்தல்) என்று சொல்லப்படும். கடவுள் மாயையினின்றும் விரித்த தனுகரணபுவன போகங்களை மறுபடியும் பழமைபோல் மாயையில் ஒடுக்குவது சங்காரம் என்னப்படும். அவர் தனுகரணபுவன போகங்களை ஆன்மாக்கள் அனுபவிக்கச் செய்தல் திதி (காத்தல்) என்னப்படும்.

மாயை தானே பிரபஞ்சமாக விரிந்தது என்னலாகாதோ; கடவுள் ஒருவரைப் பிரபஞ்சத்திற்கு நிமித்த காரணராகச் சொல்லவும் வேண்டுமோ வெனில், மண் தானே பாண்டமாகாது. குயவனே மண்ணைப் பாண்டமாக்குவான். அதுபோல் மாயை சடம் (அறிவில்பொருள்) ஆதலால் அது தானே பிரபஞ்சமாகக் காரியப்படாது. ஆன்மாக்கள் அறிவுடைப்பொருள்களாகையால் அவைகளே மாயையைக் காரியப்படுத்தும் என்னலாகாதோ வெனில், கூறுவாம். ஆன்மாக்கள் அறிவுடைப் பொருள்களாயினும் அவை பாசவசப்பட்டு அறிவும் ஆற்றலும் குன்றிக்கிடக்கின்றன. ஆதலால் ஆன்மாக்கள் தாமே மாயையைக் காரியப்படுத்தமாட்டா. மலரகிதராய் பேரறிவும் பேராற்றலும் உள்ள முழுமுதற்கடவுளே மாயையைக் காரியப்படுத்த வல்லவர். ஆனால் கடவுள் வேறு, ஆன்மா வேறு, மாயை வேறு என்று ஏன்சொல்லவேண்டும், கடவுளே உயிர்களாகவும் உலகமாகவும் இருக்கிறார் என்று சொல்லலாகாதோ வெனில், அப்படியுஞ் சொல்லலாகாது. கடவுள் அறிவுமயமானவர், உயிர்களும் அறிவுடை

பொருள்களாயினும் ஆணவமலத்தால் அறிவு மழுங்கி தாம்பெற்ற சரீரங்களுக்கேற்ப அறிவு விளங்கப்பெறுகின்றன. கடவுள் சர்வ வியாபகர். உயிர்கள் தாம்பெற்ற சரீரத்தினளவாக வியாபித்திருக்கும். கடவுள் உயர்வொப்பில்லாதவர். உயிர்கள் ஒன்றிலொன்று உயர்ந்தும் தாழ்ந்தும் இருக்கின்றன. கடவுள் சுதந்திரர். உயிர்கள் பரதந்திரப்பட்டிருப்பன. கடவுள் இன்பமயமாயிருப்பவர். உயிர்கள் துக்கமயமாயிருக்கின்றன. இவற்றாலும் இவைபோன்ற பல காரணங்களாலும் கடவுளே உயிர்களாயிருக்கிறார் என்று சொல்ல இடமில்லை. உலகம் சடமாயிருத்தலினால் சித்துப்பொருளாகிய கடவுளே சடப்பொருளாகிய உலகமாயினார் என்று சொல்லவும் இடமில்லை. ஆனால் வேதங்கள் கடவுளே எல்லாமாயிருக்கிறார் என்கின்றனவே, இதற்கென்ன பொருள்? எனில், அதற்கும் சமாதானம் கூறுவாம். தமிழ்வேதமாகிய திருவாசகமும்,

> " நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
> புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்
> உலகே ழெனத்திசை பத்தெனத்தா னொருவனுமே
> பலவாகி நின்றவா தோணோக்க மாடாமோ."

என்று கடவுள் எல்லாமாயிருக்கிறார் எனக்கூறிற்று. வேதம் இவ்வாறு கூறுவது கடவுளே உலகும் கடவுளே உயிருமாம், கடவுளைத் தவிர இரண்டாவது பொருளில்லை என்று கூறியதன்று. கடவுள் உலகுயிர்களோடு அவைவேறு தாம்வேறு என்னாதபடி அத்துவிதமாய் உடலும் உயிரும்போல் கலந்திருக்கிறார் என்று கூறியதாகும். (இதனைக் கடவுளின் வியாபகம் என்னும் இன்னொரு வியாசத்தில் விளக்குவோம்). கடவுள் எல்லாமாயிருக்கிறார் என்று சொன்ன வேதமே அவரை "அல்லையீ தல்லை யீதென" அன்மைச் சொல்லினால் துதித்தது.

### தேவாரம்.

மண்ணல்லை விண்ணல்லை வலயமல்லை மலையல்லை கடலல்லை வாயுவல்லை
யெண்ணல்லை யெழுத்தல்லை யெரியுமல்லை யிரவல்லை பகலல்லை யாவுமல்லை
பெண்ணல்லை யாணல்லை பேடுமல்லை பிறிதல்லை யானும் பெரியாய்நீயே
யுண்ணல்லை நல்லார்க்குத் தீயையல்லை யுணர்வரிய வொற்றியூருடையகோவே.

சிலர் "கடவுளுக்கு ஏன் இந்தவேலை? அவர் சும்மாவிருக்கலாகாதா?" என்பார்கள். கடவுளுக்கென யாதொரு செயலுமில்லை. அவர் விருப்புவெறுப்பில்லாதவர்; அவர் குணங்குறியில்லாதவர்; அவர் கற்பனைகடந்த தற்பரம்பொருள். அவருடைய சந்நிதி

மாத்திரத்திலேயே பிரபஞ்சம் காரியப்படும். எப்படியென்னில், சூரியன் சந்நிதியில் தாமரை அரும்புவதும் மலர்வதும் வாடுவதும்போலாம். சூரியன் தன் கிரணங்களினால் தாமரையை அரும்பவும் மலரவும் வாடவும் செய்வதுபோல், சிவபெருமான் தமது அருட்சத்தியைக் கொண்டு பிரபஞ்சத்தைத் தோற்றிக் காத்து அழிப்பார். இந்தத் தொழிலுக்கு அவர் ஆன்மாக்களின் மீதுவைத்த பேரருளே காரணமாகும்.

**தாயுமானசுவாமிகள் பாடல்.**

ஆக்கி யளித்துத் துடைக்குந் - தொழி
லத்தனை வைத்துமெள் ளத்தனை யேனுந்
தாக்கற நிற்குஞ் சமர்த்தன் - உள்ள
சாக்ஷியைச் சிந்திக்கத் தக்கது தோழி,
சங்கர சங்கர சம்பு.

(இன்னும் வரும்.)

---

## வருணாச்சிரமச் சண்டை.

இப்போது எவ்விடத்தும் வருணாச்சிரமவொழுக்கங்கள் விஷயமாக வாதங்கள் நடக்கின்றன. இவ்வாதத்தில் சைவசமயிகளுள்ளும் சிலர் தலையிட்டுக்கொள்ளுகிறார்கள். இவர்களுள் ஒருசாரார் சமய ஒழுக்கங்களும் வருணாச்சிரம ஒழுக்கங்களும் ஒன்றோடொன்றுபிரிக்கப்படாமல் பின்னிக்கிடத்தலால் சைவர்கள் கட்டாயமாய் வருணாச்சிரம ஒழுக்கங்களை அநுட்டித்தல்வேண்டும் என்கிறார்கள். மற்றொருசாரார் வருணாச்சிரம வித்தியாசங்களைப் பாராட்டுவதனால் சைவசமயம் குன்றிவிடுகின்றது; ஆதலினால், சைவசமயம்குன்றாமல் அபிவிருத்தியடையவேண்டுமாயின் வருணாச்சிரம வித்தியாசங்களைப் பாராட்டலாகாது என்கிறார்கள். அதனால் இவ்விருதிறத்தாருக்கும் அடிக்கடி விரோதம் உண்டாகிறது. வருணாச்சிரம ஒழுக்கங்களைக் கூறிய நூல்களே கலியுகத்தில் வருணாச்சிரம ஒழுக்கங்கள் கிரமமாய் நடைபெறாவெனக் கூறுகின்றன. அல்லாமலும், "மன்னவனெப்படி மன்னுயிரப்படி" என்னும் பழமொழியின்படியாகவும், "அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்-நின்றது மன்னவன் கோல்." என்னும் திருக்குறளின் படியாகவும், சென்ற ஆயிரம்வருடங்களாக மகமதியர் முதலியவர்களின் அரசாட்சியின்கீழ் இத்தேசத்தவர்களுடைய வருணாச்சிரம ஒழுக்கங்கள் தாமே குன்றிவிட்டன. இன்னும் குன்றிவருகின்றன. அல்லா

மனும், இப்போது எங்கும் தேசாபிமானிகள் கிளம்பி வருணச்சிரம வொழுக்கங்களோடு சமய ஒழுக்கங்களையும் அடியோடே தொலைத்து விட முயற்சிசெய்கிறார்கள். இவர்கள் செய்யும் முயற்சிகள் வெகு தீவிரமாய்ப் பயன்பட்டுவருகின்றன. இச்சமயத்தில், சைவசமயாபி விருத்திசெய்வதாக முன்வரும் சைவர்களும் தாங்கள் செய்யவேண்டு வன எவ்வளவோ இருக்க அவைகளைச்செய்யாமல், வருணச்சிரமச் சண்டையில் தலையிட்டுக்கொண்டு, ஒருவரையொருவர் நிந்தித்துக் கொண்டும், வியாச்சியங்களைச் செய்துகொண்டும் இருப்பது மிகவும் விசனிக்கற்பாலதாகும்.

---

## மெய்கண்டதேவர் பிரபாவம்.

(10 - வது பக்கத் தொடர்ச்சி).

இவ்வாறு பித்தவுலகம் பிதற்ற, ஞானவரம்பாகிய மோனநிலை யைத் தாங்கி சித்தந்தெளிந்து சிவமாயிருந்த மெய்கண்டதேவர், ஒரு நாள் வழக்கப்படி பொல்லாப்பிள்ளையார் திருக்கோயிலையடைந்து, அவரிடம் ஞானவிசாரணை செய்திருந்தனர். அன்று அவர் அத்திருக் கோயிலுக்குப் போகுமுன்னமே, விநாயகக் கடவுளுக்குப் பூசை செய்து விட்டுப்போன சிவவேதியர் திருவருட்செயலால் மீண்டும் அக்கோயிலுக்கு வர நேர்ந்தது. அப்போது அவ்வேதியர் அவ்வா லயத்தைச் சமீபித்தலும், அதிலிருந்து ஒருசந்தடி வருவதைக் கேட்டுச் சந்தேகங்கொண்டு, மெல்லமெல்லச் சென்று பார்த்தவளவில் மெய்கண்டதேவரும் விநாயகக் கடவுளும், குருசீடபாவமாக ஒரு வரை யொருவர் கேள்விகள் கேட்டலும், பதில் சொல்லுதலும், ஆட்சேபனைகள் செய்வதும், சமாதானங்கள் சொல்லுவதுமா யிருந் ததையறிந்து, அளவிலா வற்புதமும் ஆனந்தமுங்கொண்டு, உடனே விரைந்து சென்று, காங்கேய பூபதியைக்கண்டு "ஐயா, காங்கேய பூபதியாரே, உம்முடைய தவப்பயனே பயன். உம்முடைய குழந் தையை நாம் இதுவரையில் ஊமையென்றெண்ணிப் பாவத்திற்காளா னோம். அவர் உலகத்திலுள்ள அஞ்ஞானவிருளைப்போக்கி உயிர்களை யுச்சீவிக்கச்செய்யத் திருவவதாரஞ்செய்த ஞானசூரியனாயிருக்கி றார்" என்றுகூறி, தாம் நேரிற்கண்டதை விளம்பினர். அவ்வே தியர் விளம்பியதை யவ்வேளாளர் கேட்டு, ஒருபால் சந்தேகமும் மற்றொருபால் சந்தோஷமுங்கொண்டு அவ்வாதி சைவருடன் அத் திருக்கோயிலைச் சமீபித்து ஆராய்தலும், ஆதிசைவர் கூறியன

வெல்லாம் உண்மையா யிருக்கக்கண்டு, அடங்காத பெருமகிழ்ச்சியால் மெய்ம்மறந்து, அகங்குழைந்து ஆனந்தக்கண்ணீர் பொழிய வாலயத்துட்சென்று, பொல்லாப்பிள்ளையாரையும் மெய்கண்டதேவரையும் வணங்கி, உலகம் உச்சீவிக்குமாறு யாவருங்காணத் திருவாய் மலர்ந்தருளி வரல் வேண்டுமென்று மெய்கண்டதேவரைப் பிரார்த்திக்க, மெய்கண்டதேவரும் அதற்குத் திருவுளமிசைந்து, அன்று முதல் அவசியமான காரியங்களுக்கு உரையாடி வருவாராயினர். இவ்வற்புதச் செய்தி எங்கும் பரவி யாவரும் மெய்கண்டதேவரைத் தெய்வமாகக் கொண்டாடுவாராயினர். இவர் இவ்வாறிருக்க, திருத்துறையூரில் அருணந்தி சிவாசாரியர் சகலாகமபண்டிதரென்னுங் காரணத்திருநாமம் பூண்டு, சைவாசார துல்லியராய், நித்தியா நித்தியவஸ்து விவேகமுணர்ந்து, இம்மையாசையும் மறுமையிலாசையும் விட்டு, சிவபெருமானுருடைய திவ்வியசரண புண்டரீக நிழலடையும் ஆசைமீதூர, தாம் பெற்றவின்பம் இவ்வையகமும் பெற வேண்டி, சீடர்கள் பலருக்கு வேதாகமங்களைப் பாடமோதிக்கொண்டிருந்தனர். அவர், தமதுசீடர்களின் வேண்டுகோளுக்கிரங்கி, திருவெண்ணெய்நல்லூருக் கெழுந்தருளி, அவர்களுக்குப் பாடமோதி வருகையில், அவர்கள் மெய்கண்டதேவருடைய பிரபாவத்தையறிந்து ஒவ்வொருவராக அவரிடம் போவதைவிட்டு மெய்கண்டதேவரிடம் போகத் தொடங்கினார்கள். அதனையுணர்ந்த அருணந்திசிவாசாரியர், அதிதீவிரப் பக்குவமுடையவராயிருந்தும், ஞானாசிரியரிடம் ஞானதீக்கைபெற்று ஆணவமலம் நீங்கப்பெறாதவராயிருந்தமையால், சிறிது பொறாமைகொண்டு, மெய்கண்டதேவரைப் பரிசோதிக்கவேண்டி, ஒருநாள் அவரிடம்சென்று, அவர் சீடர்களுக்கு ஆணவமல இலக்கணத்தைப் போதித்து வருவதைக்கண்டு அவரைநோக்கி "ஆணவமலமென்பது யாது, அதனையெவ்வண்ணம் தரிசிப்பது" என்று கேட்டனர். மெய்கண்டதேவர் அருணந்தி சிவாசாரியருடைய அதிதீவரப் பக்குவத்தையும், திருவருட்குறிப்பையும் உணர்ந்து, அவர்பால் கிருபாநோக்கஞ் செய்து, அவர் கேட்டவினவுக்கு உத்தரமாக அவரைத் தமது திருவிரலாற் சுட்டிக்காட்டினர். உடனே அருணந்தி சிவாசாரியர் தாம் அவ்வாறு செருக்கி வினவியது ஆணவமலத்தின் செய்தி யென்று அறிந்து, சந்தேகந்தெளிந்து, மெய்கண்டதேவருடைய பாதபத்மங்களில் அடியற்றபனைபோல் வீழ்ந்து வணங்கி "அடியேனை யாட்கொள்ள வெழுந்தருளிய கிருபாசமுத்திரமே, ஞானவாரிதியே, அடியேனைப் பொறுத்தருளி அடிமைகொண்டரு

ளல் வேண்டும்" என்று கண்ணீர்சோர அழுது தொழுது வேண்டினர். மெய்கண்டதேவர் அருணந்தி சிவாசாரியருக்கு விதிப்படி ஞானதீக்கை செய்து, தமக்குப் பரஞ்சோதி முனிவர் அநுக்கிரகித்துக் கட்டளையிட்டருளியபடி, தாம் இயற்றியருளிய தமிழ்ச் சிவஞான போதத்தையும், அதற்குப் பொல்லாப்பிள்ளையார் அநுக்கிரகித்த சூர்ணிகையையும், தாம் செய்த வார்த்திகப் பொழிப்புரையையும் அவரிடம் கொடுத்து, உலகம் சைவசித்தாந்த உண்மைகளை ஐயந்திரிபற உணர்ந்து உச்சீவிக்கும் வண்ணம், ஏது திருஷ்டாந்த பூர்வகமாயும் ஆக்ஷேப சமாதானங்களுடனும், பரபக்ஷ சுபக்ஷங்களாக ஒரு நூல் செய்யும்படி கட்டளையிட்டுச் சிலகாலஞ் சென்று திருவெண்ணெய் நல்லூரில் ஐப்பசிமாதம் சுவாதிநட்சத்திரத்தில் சிவ சாயுச்சியம் பெற்றனர்.

---

## சிவஞானபோதச்சிறப்பு.

**(இதனை 47 - வது பக்கத்திலுங் காண்க.)**

சிவஞானபோதம் தமிழ்மொழி வடமொழி என்னும் இரண்டு பாஷைகளிலும் உள்ள வேதாகமசாரமான தெய்விகநூலாகும். வடமொழிச் சிவஞானபோதம் சிருட்டிகாலத்தில் பரமசிவம் சதாசிவ மூர்த்தியை யதிட்டித்துத் திருவாய்மலர்ந்தருளிய காமிகமுதலிய இருபத்தெட்டு திவ்வியாகமங்களுள், ருரு என்பவருக்கு உபதேசித்த காரணத்தால் இரௌரவம் எனப்பெற்ற ஆகமத்தில் பாசவிமோசனப்படலத்தில், பன்னிரண்டு சூத்திரரூபமாயிருப்பது. தமிழ்ச் சிவஞானபோதம். பசுகரணம் நீங்கிப் பதிகரணம்பெற்றுச் சிவமாய் விளங்கிய மெய்கண்டதேவரால் பன்னிரண்டுசூத்திரங்களாகத் திருவாய்மலர்ந்தருளப்பெற்றது. சிறுமீன் சினையினும் நுண்ணிய விதையில் மிகப்பெரிய ஆலமரம் அடங்கியிருத்தல்போல் இந்நூலில் உலகத்திலுள்ள பற்பலமதங்களின் கோட்பாடுகளும், அவற்றின் பூர்வ பட்சங்களும், திரிபதார்த்த இலக்கணங்களும் அடங்கி யிருக்கின்றன. இவ்விதமாகச் சுருங்கச்சொல்லி விளங்கவைக்கும் ஞானநூல்கள் தமிழிலும் வடமொழியிலுமே யன்றி வேறு பாஷைகளில் இல்லாமையால் தமிழ்மொழி வடமொழிகளின் விசேடம் இனைத்தென உணரலாகும். இந்நூலைவிரித்து அருணந்திசிவாசாரியர் சிவஞான சித்தியார் என்னும் வழிநூல் செய்தருளினர். மெய்கண்டதேவர் சந்நிதியில் தாம்கேட்ட கேள்விகளுக்கு அவர் திருநோக்கால் தம

க்கு விளங்கிய பொருள்களை "இருபாவிருபது" என்னும் நூலாக்க் கூறியருளினர். மெய்கண்டதேவருடைய மற்றொரு மாணாக்கராகிய திருவதிகை மனவாசகங் கடந்தார் "உண்மைவிளக்கம்" என்னும் நூலை யருளிச்செய்தனர். அருணந்தி சிவாசாரியருடைய மாணாக்க ராகிய மறைஞானசம்பந்த சிவாசாரியருடைய அநுக்கிரகம்பெற்ற தில்லைவாழந்தணர்களுள் ஒருவராகிய உமாபதி சிவாசாரியர் சிவ ஞானபோதத்தின் புடைநூல்களாகிய சிவப்பிரகாசம், திருவருட் பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சு விடுதூது, உண்மைநெறிவிளக்கம், சங்கற்பநிராகரணம் என்னும் எட்டுச் சைவசித்தாந்த சாத்திரங்களைச் செய்தருளினர். இவ்வெட் டும், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், இருபாவிருபது, உண் மைவிளக்கம், உய்யவந்ததேவர் அருளிய திருவுந்தியார், திருக்கட வூர் உய்யவந்ததேவரருளிய திருக்களிற்றுப்படியார் என்னும் ஆறும் கூடிச் சித்தாந்த சாத்திரங்கள் பதினான்காகும்.

**சித்தாந்தநூல்களின் திருநாமங்கள்.**

உந்தி களிறு வுயர்போதஞ் சித்தியார்
பிந்திருபா வுண்மைப் பிரகாசம்—வந்தவருட்
பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்ப முற்று.

வடநூற்கடலும் தமிழ்நூற்கடலுங் கரைகண்டுணர்ந்த மாதவச் சிவஞானமுனிவர், சிவஞானபோதத்திற்குத் திராவிட மகாபாஷியம் என்னும் விருத்தியுரை செய்தருளினர்.

---

## பற்று.

பற்று, பாசம், பந்தம், அவா, ஆசை என்பன ஒருபொருட் சொற்கள். பற்று, அகப்பற்று புறப்பற்று என இருவகைப்படும். இவை முறையே நான் எனது எனவும், அகங்காரம் மமகாரம் எனவுஞ் சொல்லப்படும். தன்னிடத்தில்வைத்த ஆசை அகப்பற் றும், தன்னைச்சார்ந்த பொருள்களாகிய மனைவி மக்கள் முதலியவர்க ளிடத்தும், மாதரிடத்தும், பொன் பூமி முதலியவற்றினிடத்தும் வைத்த ஆசை புறப்பற்றுமாம்.

ஆன்மா என்றுஉண்டோ அன்றே அதனிடத்தில் பாசமாகிய பற்றும் உண்டு. ஆன்மா என்றும் தனித்திராது. அது பாசத்தோ டாவது கூடியிருக்கும் சிவத்தோடாவது கூடியிருக்கும். அது

அசத்தாகிய பாசத்தோடுகூடி இருக்கும்போது அசத்தாகவும், சத்தாகிய சிவத்தோடு கூடி யிருக்கும்போது சத்தாகவும் இருக்கும். அதனால் அது சதசத்து என்று சொல்லப்படும். அது அசத்தாகிய பாசத்தோடு கூடியபோது பசு என்னப்படும். பாசமாகிய ஆணவ மலத்தால் விழுங்கப்பட்டிருத்தலால் அணு என்றுஞ் சொல்லப்படும். அது ஆணவமலத்தோடு கூடியபோது ஆன்மா வேறு ஆணவமலம் வேறு என்னுதபடி ஆணவமலமேயாயிருக்கும். ஆணவமலத்தி னின்றும் நீங்கிச் சிவத்தோடு கூடியபோது சிவம் வேறு தான் வேறு என்னுதபடி சிவமேயாயிருக்கும். இவ்வாறு சிவமும் ஆன்மாவும் பாசமும் ஒற்றுமைப்பட்டு நின்றநிலை அத்துவித நிலையென்று சொல் லப்படும். ஆன்மா பாசத்தோடு அத்துவிதமாக (இரண்டறக்கலந்து) நிற்கும்நிலை பெத்தநிலையெனவும், சிவத்தோடு இரண்டறக்கலந்திருக் கும் நிலை முத்திநிலை யெனவுஞ் சொல்லப்படும்.

**தாயுமானசுவாமிகள்.**

ஆணவத்தோ டத்துவித மானபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினே டத்துவிதஞ் சாருநா ளெந்நாளோ.

ஆன்மா பெத்தநிலையிலே அஞ்ஞானத்தினுலே பொருளல்லா தனவாகிய தேகாதிப்பிரபஞ்சங்களைப் பொருளென மதித்து அவற்றி னிடத்தில் மேலும்மேலும் பற்றுவைத்தலினுல் ஓயாமல் பிறந்து பிறந் துழல்கின்றன.

**திருக்குறள்.**

பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரு
மருளானு மாணுப் பிறப்பு.

ஆதலால் மோட்சாபேட்சை யுடையவர்கள் தேகாதிப் பிரபஞ் சங்களிடத்தில் பற்று ஒழிந்திருத்தல்வேண்டும். மோட்சம், முத்தி, வீடு என்பன ஒருபொருட்சொற்கள். இவையாவும் (பற்று) விட் டிருத்தல் என்னும் பொருளையே தருதலால் பற்றுவிட்டிருத்தலே முத்தி யென்னப்படும். (வீடு என்பது விடுதல் என்னும் சொல்லின் திரிபாகிய முதனிலைத்திரிந்த தொழிற்பெயர்.)

மனிதர்கள் பற்றையொழிப்பதற்குப் பற்பல உபாயங்களை யநு சரிப்பர். சிலர் துறவறத்தால் பற்றையொழிக்க முயலுவர். சிலர் தவம் யோகம் முதலியவற்ருல் அதை யொழிக்கப் பார்ப்பர். சிலர் ஞான நூலாராய்ச்சியால் அதனை நீக்க வழிதேடுவர்.

(இன்னும் வரும்.)